உயிர் அழும் போது ஓசைகள் ஏது
ஆயுத ராகங்கள் அழுவதில்லை
ஆயினும் சோகம் அடைவதில்லை

எங்களை பிரிந்து தோழியரே
நன்றினை காண்போம் தோழியரே
உங்களின் கனவே தோழியரே
கண்களில் சுமந்தோம் தோழியரே

உயிர் அழும் போது ஓசைகள் ஏது

போரினில் உங்கள் சாதனை வீரம்
என்றும் எங்கள் நெஞ்சினில் வாழும்
தோழியர் நீங்கள் சொன்னது போல
மக்களை காப்போம் அது உறுதி
கூந்தல் பின்னே மடிக்கையிலே
உங்கள் ஞாபகம் வடுத்துக்களே
காவல் கடமை இருட்டினிலே
உங்கள் நினைவு வெளிச்சங்களே

உயிர் அழும் போது ஓசைகள் ஏது
ஆயுத ராகங்கள் அழுவதில்லை
ஆயினும் சோகம் அடைவதில்லை

தலைவன் தானே எங்களின் சுவாசம்
தாயகம் மீதே எங்களின் பாசம்
உலகப் படத்தில் ஈழமும் தோன்றும்
உங்களின் மீது அது உறுதி
குப்பி தகட்டின் உருவினிலே
கூட இருந்தோம் பறவைகளே
விரைந்து இங்கே வாருங்களே
விடியும் தேசம் அழைக்கிறதே

உயிர் அழும் போது ஓசைகள் ஏது
ஆயுத ராகங்கள் அழுவதில்லை
ஆயினும் சோகம் அடைவதில்லை